பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

30 03 2025 **SUNDAY** 7 15 **PM**
ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. நக்ஸலைட்டு பிரச்சினைகளால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அமைதிக்கான புதிய அத்தியாயம் தொடங்கியுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. சத்திஷ்கரில் 50 நக்ஸலைட்டுகள் சரணடைந்துள்ளது வரவேற்கத்தக்கது என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

3. திருச்சி – யாழ்ப்பாணம் இடையேயான விமான சேவை மீண்டும் தொடங்கியது.

4. மியான்மரில் இன்று மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டது. அது ரிக்டர் அளவில் 5 புள்ளி ஒன்றாக பதிவானது.

5. அஹமதாபாத் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Aryan Shah** பட்டம் வென்றார்.

**>>>>><<<<<**

நக்ஸலைட்டு பிரச்சினைகளால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அமைதிக்கான புதிய அத்தியாயம் தொடங்கியுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சத்திஷ்கர் மாநிலம், பிலாஸ்பூர் மாவட்டத்திற்கு உட்பட்ட மொஹபத்ரா கிராமத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

சத்திஷ்கர் உட்பட பல்வேறு மாநிலங்களில் நக்ஸலைட்டு பிரச்சினை அதிகரித்ததற்கு, காங்கிரஸின் கொள்கைகள் ஊக்கமளித்ததாக அவர் குறை கூறினார்.

காங்கிரஸ் மத்தியில் ஆட்சிப் பொறுப்பில் இருந்த 60 ஆண்டுகாலத்தில் நக்ஸலைட்டு பிரச்சினையை கட்டுப்படுத்த தவறிவிட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

நக்ஸலைட்டு பிரச்சினை காரணமாக ஏராளமானோர் உயிரிழந்ததையும் அவர் சுட்டிக்காட்டினார்.

பிஜேபி தலைமையிலான மத்திய அரசு பொறுப்பேற்ற பின்னர், நக்ஸலைட்டு பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் வளர்ச்சித் திட்டப் பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதாவும் அவர் கூறினார்.

இதன் காரணமாக நக்ஸலைட்டுகள் சரணடைந்து வருவதாகவும் திரு. நரேந்திர மோடி தெரிவித்தார்.

இதற்கிடையே, சத்திஷ்கரின் பீஜப்பூர் மாவட்டத்தில் 50 நக்ஸலைட்டுகள் இன்று சரணடைந்தனர்.

சரணடைந்த 50 பேரில் 13 பேருக்கு 68 லட்சம் ரூபாய் பரிசுத்தொகை அறிவிக்கப்பட்டிருந்ததாகவும் அம்மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் திரு. ஜிதேந்திரகுமார் யாதவ் கூறினார்.

அதிக எண்ணிக்கையில் நக்ஸலைட்டுகள் சரணடைந்தது இதுவே முதல்முறை என்றும் அவர் தெரிவித்தார்.

இதற்கிடையே, 50 நக்ஸலைட்டுகள் வன்முறையை கைவிட்டுவிட்டு சரணடைந்துள்ளது வரவேற்கத்தக்கது என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், ஜனநாயக பாதைக்கு திரும்பும் நக்ஸலைட்டுகளின் மறுவாழ்வு உறுதி செய்யப்படும் என்றார்.

அடுத்த ஆண்டு மார்ச் மாத இறுதிக்குப் பின்னர் நக்ஸலைட்டு பிரச்சினையே இருக்காது என்றும் திரு. அமித் ஷா தெரிவித்தார்.

இதற்கிடையே, அரசு மீதான நம்பிக்கை அதிகரித்துள்ளதே நக்ஸலைட்டுகள் சரணடைவதற்கு காரணம் என்று அம்மாநில முதலமைச்சர் திரு. **Vishnu Deo Sai** கூறியுள்ளார்.

பாதுகாப்புப் படை வீரர்களுக்கான முகாம்கள் அதிக எண்ணிக்கையில் ஏற்படுத்தப்பட்டதும், நக்ஸலைட்டு பிரச்சினையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வளர்ச்சித் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதும் இதற்கு காரணம் என்று அவர் தெரிவித்தார்.

சரணடைந்தவர்களின் மறுவாழ்வுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் அரசு வழங்கும் என்றும் திரு. **Vishnu Deo Sai** கூறினார்.

**>>>>><<<<<**

வளர்ச்சியை மட்டுமே தாரக மந்திரமாக கொண்டு தேசிய ஜனநாயக கூட்டணி செயல்பட்டு வருவதாக பிஜேபி மூத்த தலைவர்களில் ஒருவரும், மத்திய உ ள்துறை அமைச்சருமான திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

பீகாரின் **Gopalganj**–ல் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சிப் பொறுப்பிலிருந்த போது, பீகாருக்கு 2 லட்சத்து 80 ஆயிரம் கோடி ரூபாய் மட்டுமே வழங்கப்பட்டதாக அவர் கூறினார்.

பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அரசு பொறுப்பேற்ற பின்னர், பீகார் மாநிலத்திற்கு கடந்த பத்தாண்டுகளில் 9 லட்சத்து 23 ஆயிரம் கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளதாகவும் திரு. அமித் ஷா தெரிவித்தார்.

**>>>>><<<<<**

வளர்ச்சியடைந்த இந்தியா இளையோர் நாடாளுமன்றம், மத்திய அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா தலைமையில் அடுத்த மாதம் ஒன்றாம் தேதி தொடங்கி 3ஆம் தேதிவரை நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்டம் மற்றும் மாநில அளவில் நடைபெற்ற இளையோர் நாடாளுமன்ற விவாதத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட 108 பேர் இதில் பங்கேற்கவுள்ளதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

வளர்ச்சியடைந்த இந்தியா மற்றும் ஒரே நாடு ஒரே தேர்தல் குறித்த விவாதங்களில் இவர்கள் கலந்து கொள்ளவுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**>>>>><<<<<**

பெங்களூரு - **Kamakhya** இடையேயான விரைவு ரயில் ஒடிசா அருகே தடம்புரண்டு விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்தார். ஏழு பேர் காயமடைந்தனர்.

கட்டாக் மாவட்டத்திற்கு உட்பட்ட **Nirgundi**–ல் இந்த விபத்து நேரிட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்த விபத்து குறித்து ஒடிசா முதலமைச்சருடன் தொடர்ந்து விவரங்களை கேட்டறிந்து வருவதாக அஸ்ஸாம் முதலமைச்சர் திரு. ஹிமந்த பிஸ்வா சர்மா கூறியுள்ளார்.

இதற்கிடையே, இந்த விபத்து தொடர்பாக தகவல்களை வழங்குவதற்கென சென்னை-சென்ட்ரல், காட்பாடி, ஜோலார்பேட்டை, பெரம்பூர் ரயில் நிலையங்களில் உதவி மையங்கள் ஏற்பட்டுள்ளதாக தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

சென்னை-சென்ட்ரல் ரயில் நிலையத்தில் 0 4 4 – 2 5 3 5 4 1 4 0 என்ற எண்ணை தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

பெரம்பூரை பொறுத்தவரை 9 3 6 0 0 2 7 2 8 3 என்ற எண்ணையும், காட்பாடியில் 9 4 9 8 6 5 1 9 2 7 என்ற எண்ணையும், ஜோலார்பேட்டையில் 7 7 0 8 0 6 1 8 1 0 என்ற எண்ணையும் தொடர்பு கொண்டு விவரங்களை அறிந்து கொள்ளலாம் என்று தெற்கு ரயில் தெரிவித்துள்ளது.

**>>>>><<<<<<**

பருவநிலை மாற்றத்தினால் ஏற்படும் பாதிப்புகளை தடுப்பதற்கு ஒருங்கிணைந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியம் என்று குடியரசு துணைத்தலைவர் திரு. ஜெக்தீப் தங்கர் கூறியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற சுற்றுச்சூழல் தொடர்பான தேசிய மாநாட்டின் நிறைவு அரங்கில் பங்கேற்று அவர் உரையாற்றினார்.

சுற்றுச்சூழல் பாதிப்புகளை தடுப்பதில் புதுமை கண்டுபிடிப்புகள் முக்கியப் பங்கு வகிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

சுற்றுச்சூழல் பாதிப்புகளை தடுப்பதற்கான நடவடிக்கைகளுக்கு பொதுமக்கள் முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்றும் திரு. ஜெக்தீப் தங்கர் கூறினார்.

**>>>>><<<<<<**

தெலங்கானா முதலமைச்சர் திரு. ரேவந்த் ரெட்டி, அம்மாநில ஆளுநர் திரு. **Jishnu Dev Varma**–வை இன்று சந்தித்துப் பேசினார்.

ஹைதராபாதில் உள்ள ஆளுநர் மாளிகையில் சுமார் ஒரு மணிநேரம் இந்த சந்திப்பு நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

அமைச்சரவை விரிவாக்கம் குறித்து இந்த சந்திப்பின்போது விவாதிக்கப்பட்டதாக அவர் மேலும் கூறுகிறார்.

**>>>>><<<<<<**

ஜம்மு காஷ்மீரில் குடும்ப உறுப்பினர்களுக்கு இடையேயான சொத்து பரிமாற்றத்திற்கு பத்திரப் பதிவு கட்டணத்திலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளதாக முதலமைச்சர் திரு. உமர் அப்துல்லா கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை பதிவு செய்துள்ள அவர், பட்ஜெட்டில் இதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டதை சுட்டிக்காட்டினார்.

தற்போது அரசாணையும் பிறப்பிக்கப்பட்டிருப்பதாக அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த சலுகை வரும் செவ்வாய்க்கிழமை முதல் செயல்பாட்டிற்கு வருவதாகவும் திரு. உமர் அப்துல்லா கூறியுள்ளார்.

**>>>>><<<<<<**

திருச்சி – யாழ்ப்பாணம் இடையேயான விமான சேவை மீண்டும் தொடங்கியது.

வாரத்திற்கு 6 நாட்களுக்கு விமானங்கள் இயக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருச்சியிலிருந்து பிற்பகல் மணி 1.25-க்கு புறப்படும் விமானம், யாழ்ப்பாணத்திற்கு பிற்பகல் 2.25-க்கு சென்றடையும்.

மறுமார்க்கத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து பிற்பகல் 3.10க்கு புறப்படும் விமானம் திருச்சிக்கு மாலை மணி 4.05-க்கு வந்தடையும்

**>>>>><<<<<<**

மியான்மரில் இன்று மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டது.

**Mandalay** அருகே நேரிட்ட இந்த நிலநடுக்கம், ரிக்டர் அளவில் 5 புள்ளி ஒன்றாக பதிவானது.

இதற்கிடையே, மியான்மர் நிலநடுக்கத்தால் உயிரிழந்தோர் எண்ணிக்கை ஆயிரத்து 644ஆக அதிகரித்துள்ளது.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதில் பெரும் சிரமங்கள் ஏற்பட்டுள்ளதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன.

சாலைகள் மற்றும் தொலைத்தொடர்பு வசதிகள் துண்டிக்கப்பட்டதே இதற்கு காரணம் என்றும் அந்த செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், இந்தியாவின் சார்பில் நிவாரண உதவிகள் மியான்மருக்கு தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன.

இதற்கிடையே, தாய்லாந்தில் நேரிட்ட நிலநடுக்கத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 17ஆக அதிகரித்துள்ளது.

77 பேரை தேடும் பணி நடைபெற்று வருவதாக அந்நாட்டு அரசு கூறியுள்ளது.

இந்த நிலநடுக்கத்திற்குப் பிறகு 166 முறை நிலஅதிர்வு உணரப்பட்டதாகவும் அந்நாட்டு அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

**>>>>><<<<<**

சீனா, ஜப்பான், தென்கொரியா ஆகிய நாடுகள் பரஸ்பரம் வர்த்தகத்தை மேம்படுத்துவதென முடிவு செய்துள்ளன.

சியோலில் நடைபெற்ற இந்த நாடுகளின் வர்த்தக துறை அமைச்சர்கள் பங்கேற்ற கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

மூன்று நாடுகளுக்கு இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தை ஏற்படுத்துவதற்கான ஒருங்கிணைந்த உயர்நிலை பேச்சுக்களை தொடர்வது என்றும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

**>>>>><<<<<**

அஹமதாபாத் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Aryan Shah** பட்டம் வென்றார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர் 6-1, 6-3 என்ற செட்கணக்கில் இங்கிலாந்தின் **Jay Clarke**–வை வென்றார்.

**>>>>><<<<<**

ஆசிய மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Udit** மற்றும் **Deepak Puniya** இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளனர்.

ஜோர்டானின் அம்மானில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் 61 கிலோ எடைப்பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் **Udit** சீனாவின் **Wanhao Zou -**வை வென்றார்.

ஆடவர் 92 கிலோ எடைப்பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் **Deepak Puniya** ஜப்பானின் **Ishiguro**–வை வென்றார்.

**>>>>><<<<<**

ஆஸ்திரேலிய ஓப்பன் படகு போட்டியில் இந்திய ராணுவ அணி, 4 தங்கம், 4 வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

**>>>>><<<<<**

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் விசாகப்பட்டிணத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் தில்லி அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் ஹைதராபாத் அணியை வென்றது.

குவஹாத்தியில் இன்னும் சற்று நேரத்தில் தொடங்கவுள்ள மற்றொரு போட்டியில் சென்னை - ராஜஸ்தான் அணியை எதிர்கொள்கிறது.

இதில் டாஸ் வென்ற சென்னை அணி முதலில் பந்துவீச தீர்மானித்துள்ளது.

**>>>>>END<<<<<<**